# கிறிஸ்தவன் யார்?

அல்பார்ட் என். மாட்டின்

REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**கிறிஸ்தவன் யார்?**

*அல்பர்ட் என். மாட்டின்*

*முதல் பதிப்பு 2006*
*இரண்டாம் பதிப்பு: 2014*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைப்பேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.org வலைப்பூவைப் பார்க்கவும்.

# கிறிஸ்தவன் யார்?

நமது அறிவீனத்தின் காரணமாகவும், அக்கறையற்ற தன்மையின் காரணமாகவும் நமக்கு எந்தவிதமான பாதிப்பையோ அல்லது ஆபத்தையோ விளைவிக்கக் கூடாத பல காரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு மண்ணிறத்து மாடு பச்சைப் புல்லைத்தின்று வெள்ளை நிறத்தில் எப்படிப் பாலைத் தருகிறது? என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்கக் கூடியவர்களும் நிச்சயமாக நம்மத்தியில் இருக்கவே செய்கின்றனர். நம்மில் அநேகருக்கு ஐன்ஸ்டைனின் கோட்பாட்டைப்பற்றி அடியோடு ஒன்றுமே தெரியாது. ஆனால், அதை விளக்கும்படி யாராவது நம்மை வற்புறுத்தினால் நம்பாடு கஷ்டம்தான். ஐன்ஸ்டைனின் கோட்பாட்டைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதது மட்டுமல்ல, அதைப்பற்றி நாம் அக்கறை கொள்வதுமில்லை. இருப்பினும், அதைப் பற்றிய நமது அறிவீனமோ, அக்கறைக்குறைவோ அத்தனை பாரதூரமானதோ, ஆபத்தானதோ அல்ல.

ஆனால், அதேவேளை, நமது அறிவீனத்தாலும், அக்கறையின்மையினாலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி, நமக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு சில காரியங்களும் இருக்கின்றன. அத்தகைய ஒரு காரியமே "கிறிஸ்தவன் யார்?" என்ற வினாவிற்கான விடையாகும். இன்னுமொருவிதத்தில் கூறப்போனால், ஒரு ஆணோ, பெண்ணோ, சிறுவனோ, சிறுமியோ வேதத்தின் அடிப்படையில் தம்மைக் கிறிஸ்தவன் என அழைத்துக் கொள்ளும் தகுதியை எப்போது அடைகிறார்கள்? என்பதே இவ்வினாவாகும்.

ஒரு ஆணோ, பெண்ணோ மெய்க்கிறிஸ்தவரா? என்பதை

*நாம் மிகச் சாதாரணமானதாக எண்ணித் தீர்மானித்து விடக்கூடாது. இதைப்பற்றி நாமெடுக்கும் தவறான முடிவு பாரதூரமானதும், ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமாகும். ஆகவே, கிறிஸ்தவன் யார்? என்ற வினாவிற்கான வேத பூர்வமான நான்கு விளக்கங்களை நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.*

## 1 கிறிஸ்தவன் என்பவன், வேதத்தின் அடிப்படையில் தனது பாவத்தை உண்மையாக உணர்ந்து புரிந்து கொண்டவன்.

*உலகிலுள்ள ஏனைய மதங்களையும், கிறிஸ்தவத்தையும் வேறுபடுத்திக் காட்டும் அநேக காரியங்களில் ஒன்று, கிறிஸ்தவம், அடிப்படையிலேயே பாவிகளின் மதம் என்பதே. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி யோசேப்புக்கு அறிவித்த கர்த்தருடைய தூதன், "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான் (மத்தேயு 1:21). பவுல் அப்போஸ்தலன் 1 தீமோத்தேயு 1:15ல்; "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" என்று கூறுவதைப் பார்க்கிறோம். லூக்கா 5:31-32ல், இயேசு கிறிஸ்துவே, "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று கூறியுள்ளார். தனது பாவங்களை உணர்ந்து அதிலிருந்து விடுபடத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பவனே மெய்க்கிறிஸ்தவன்.*

*வேதத்தைப் படித்துப் பார்க்கும்போது, பாவத்தைக்குறித்து இருவிதமான பிரச்சனைகளை நாம் ஒவ்வொருவரும் சுமந்து கொண்டிருப்பதை அது சுட்டிக்காட்டுகின்றது. அதாவது நம்மைக் குற்றவாளிகளாகக் காட்டும் ஒரு அறிக்கையையும், கெட்டுப்போன ஒரு இருதயத்தையும் நாம் சுமந்து கொண்டிருப்பதாக அது தெரிவிக்கின்றது. ஆதியாகமம்*

*மூன்றாம் அதிகாரத்தில் ஆரம்பித்து, வேதத்தின் இறுதி நூலான வெளிப்படுத்தின விசேஷம் வரை, கடவுளுக்கு முன் மனிதன் செய்த பாவத்தையும், அவனது வீழ்ச்சியையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி வாசித்துப் பார்ப்போமானால், பாவத்தைப் பற்றி வேதம் போதிக்கும் அனைத்தையும் இவ்விரண்டு அடிப்படைப் பிரிவுகளுக்குள் அடக்கிவிடலாம்.*

*நம்மைக் குற்றவாளிகளாகக்காட்டும் அறிக்கை என்றால் என்ன? வேதம் போதிக்கின்ற, பாவத்தின் காரணமாக நம்மைப் பிடித்துள்ள குற்றவுணர்வையே இவ்வார்த்தைப் பிரயோகத்தின் மூலம் நான் சுட்டிக்காட்ட முயல்கிறேன். நாம் இவ்வுலகில் பிறக்கும் முன்பே குற்றவாளிகள் என்ற அறிக்கையை சுமக்கத் தொடங்கிவிட்டோம் என்று வேதம் போதிக்கின்றது. இப்படியாக, "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லோருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று" என்று ரோமர் 5:12இல் வாசிக்கிறோம்.*

*எல்லோரும் எப்போது பாவம் செய்தார்கள்? நாமெல்லோரும் ஆதாமுக்குள் பாவம் செய்தோம், மனித குலமனைத்தையும் பிரநிதித்துவப்படுத்தும்படியாக கடவுள் ஆதாமை நியமித்தார். ஆதாம் பாவம் செய்தபோது நாமும் அவனோடு இணைந்து பாவம் செய்து, அவனோடு பாவத்தில் வீழ்ந்தோம். இதையே பவுல் அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 15:22ல் பின்வருமாறு கூறுகிறார், "ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்". ஏதேன் தோட்டத்தில் மனிதன் பாவத்தோடு படைக்கப்படவில்லை. ஆனால், ஆதாம் பாவம் செய்த உடனேயே நாமும் அப்பாவத்திற்குப் பொறுப்பாளிகளாக குற்றம் சுமத்தப்பட்டோம். ஆதாமின் மூல பாவத்தினால் நாமும் வீழ்ச்சியடைந்து சபிக்கப்பட்ட மனுக்குலத்தின் ஓர் அங்கமாக இருந்து வருகிறோம்.*

*அதுமட்டுமல்லாமல், நாம் பிறந்த பின்பு செய்கின்ற பாவச் செயல்களினால் நமது குற்ற உணர்வு மேலும் அதிகரிக்கின்றது*